செ.வெ.எண்: 09 நாள்: 04.09.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் 75வது சுதந்திரதின விழா நடைபெற்றதை முன்னிட்டு 75 மரக்கன்றுகள் நடும் விழாவை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.09.2021) துவங்கி வைத்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் 75வது சுதந்திரதின விழா நடைபெற்றதை முன்னிட்டு 75 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.09.2021) துவங்கி வைத்தார்.

வேதாரண்யம் நகராட்சிக்கு உட்பட்ட பேருந்து நிலையத்தில் 75வது சுதந்திரதின விழா நடைபெற்றதை முன்னிட்டு மினி மாரத்தான் ஓட்டம் போட்டியினை மாவட்ட ஆட்சியர் கொடியசைத்து துவங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 01.08.2021 முதல் 07.08.2021 வரை கொரோனா வைரஸ் தடுப்பு பேரியக்க நிகழ்வில் வேதாரண்யம் ஒன்றியத்தில் உள்ள 36 ஊராட்சிகளிலும் சிறப்பாக செயல்பட்ட ஊராட்சி செயலர்களுக்கு சிறப்பு பரிசுகளையும், 36 ஊராட்சிகளில் பணிபுரியும் 278 தூய்மைக் காவலர்களுக்கு வேதாரண்யம் பிரியம் அறக்கட்டளை சார்பில் மழைக் காலங்களில் உதவும் மழை கோட்டினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து 75வது சுதந்திரதின பவள விழா நடைபெற்றதை முன்னிட்டு 75 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியின் தொடக்கமாக வேதாரண்யம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் மரக்கன்றை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் நட்டு துவங்கி வைத்தார்.

மேலும், வேதாரண்யம் அகஸ்த்தியம் பள்ளி ஊராட்சியில் உள்ள உப்பு சத்தியாகிரக காட்சி விளக்க மையத்தில் உள்ள நினைவு தூணையும், உப்பு சத்தியாகிரக சட்டத்தை மீறியதற்காக விடுதலை போராட்ட வீரர் இராஜாஜி அவர்கள் தண்டிக்கப்பட்டு காவல் வைக்கப்பட்ட இடத்தினையும் பார்வையிட்டு ஆய்வு செய்த பின் அந்த பகுதியில் உள்ள பழுதடைந்துள்ள சாலையை பராமரிக்குமாறு உரிய அலுவலருக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் வேதாரண்யம் வருவாய் கோட்டாட்சியர் திரு.து.சு.துரைமுருகன், ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.கமலா அன்பழகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பாஸ்கரன், திரு.இராமலிங்கம், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**